இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 17-05-2025

# மனித மனங்களை நாசப்படுத்தி விட்டார்கள்!

**பா**கிஸ்தான் நாடு, பயங்கரவாதிகளுக்கு துணை போய்க் கொண்டிருக்கிறது. எனவே, அவர்கள் மீதான தாக்குதல் அவசியமானது. ஆனால் அந்தப் போரை வைத்துக் கொண்டு செய்யப்படும் அரசியல் சகிக்க முடியாததாக இருக்கிறது. மனித மனங்களை எந்தளவுக்கு பா.ஜ.க., சங்கிக் கூட்டம் நாசமாக்கி வருகிறது என்பதை கடந்த ஒரு வாரமாக உணர்ந்து வருகிறோம்.

‘ஆபரேஷன் சிந்தூர்’ என்று பெயரை வைத்து குங்குமப் பொட்டு சிதறி இருப்பதைப் போல காட்சிப்படுத்தி - ஒரு போரை புரமோஷன் மெட்டீரியலாக மாற்றினார்கள். இந்த நடவடிக்கைகள் குறித்து வெளியுறவுத் துறைச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி, கர்னல் சோபியா குரேஷி, விங் கமாண்டர் வியோமிகா சிங் ஆகியோரை வைத்து பத்திரிக்கையாளர் சந்திப்பை நடத்தினார்கள்.

இந்தியா - பாகிஸ்தான் போர் நிறுத்தம் என்று இந்தியாவின் வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி அறிவித்தார். அவர் அறிவித்தார், அவ்வளவுதான். முடிவை எடுத்தவர் அவர் அல்ல. பிரதமர் மோடி - பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் - உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆகிய மூவரும் எடுத்த முடிவு அது. அந்த முடிவை அவர் பொதுவெளியில் வந்து சொல்கிறார். அவ்வளவுதான். சொல்வது மட்டும் தான் அவரது வேலை. ‘போர் நடக்கப் போகிறது’ என்று சொன்னதும் விக்ரம் மிஸ்ரிதான். ‘போர் நடந்து கொண்டிருக்கிறது’ என்று சொல்லி வந்ததும் விக்ரம் மிஸ்ரிதான். அந்த வரிசையில்தான், ‘போர் நிறுத்தம்’ என்பதையும் சொன்னார்.

உடனே, விக்ரம் மிஸ்ரி ‘தேசத் துரோகி’ ஆகிவிட்டார். ‘துரோகி’ , ‘நம்பிக்கைத் துரோகி’ என்ற பட்டத்தை சங்கிகள் இவருக்குத் தந்தார்கள். இவரோடு விட்டார்களா? இல்லை. இவர் மகள் லண்டனில் படிக்கிறார். அவரது சமூக வலைதளப் பதிவுக்குச் சென்று அவரையும் திட்டித் தீர்த்துள்ளார்கள். நிலைமை கட்டுக் கடங்காமல் போனதும் நொந்து போன விக்ரம் மிஸ்ரி, தனது எக்ஸ் பக்கத்தையே எடுத்துவிட்டார். ஒரே நாளில் தேசபக்தர், தேசத்துரோகி ஆக்கப்பட்டு விட்டார்.

**இவர்கள் உண்மையில் துரோகி, தேசத்துரோகி, நம்பிக்கைத் துரோகி என்று சொல்ல வேண்டியது யாரை? போரை நிறுத்திய பெரிய மனிதர்களைத்தான் சொல்ல வேண்டும். அதைச் சொல்ல முதுகெலும்பு இல்லாத இந்த சங்கிகள், ஒரு அரசு அதிகாரியை ‘தேசத் துரோகி’ ஆக்குகிறார்கள். 1989 முதல் உலகின் பல நாடுகளில் நிம்மதியாக வேலை பார்த்த விக்ரம் மிஸ்ரியால், இந்தியாவில் நிம்மதியாக வேலை பார்க்க முடியவில்லை. அவரையும், அவரது மகளையும் பிறப்பைச் சந்தேகித்து பதிவு போடுகிறது மதவாதக் கூட்டம்.**

இதே போலத்தான் கர்னல் சோபியா குரேஷியும் கொச்சைப்படுத்தப்படுகிறார். பாகிஸ்தானுக்கு எதிராகப் போரிட்டவர் ஒரு இசுலாமியப் பெண் என்று காட்டுவதே குரூரமானது. யாரோ சிலர் செய்யும் தவறுக்கு ஒட்டு மொத்தச் சமூகத்தையும் கொச்சைப்படுத்தும் சங்கி அரசியல்தான் சமூகத்தை நாசப்படுத்தி வருகிறது. மத்தியப் பிரதேச மாநில பா.ஜ.க. அமைச்சர் குன்வர் விஜய்ஷா என்பவர், விஷ வாந்தியை எடுத்திருக்கிறார்.

**“பகல்காமில் நமது சகோதரிகளின் குங்குமத்தை அழித்தவர்களை, அவர்களின் (பயங்கரவாதிகளின்) சகோதரியை வைத்தே பிரதமர் மோடி ஒழித்துவிட்டார்” என்று பேசி இருக்கிறார் பா.ஜ.க. அமைச்சர். எந்த பயங்கரவாதியின் சகோதரி, சோபியா குரேஷி? இசுலாமியர் என்பதால் அவர் இசுலாமிய பயங்கரவாதிகள் அனைவருக்கும் சகோதரி ஆகிவிடுவாரா? ஏதோ ஒரு இடத்தில் குன்வர் விஜய்ஷாவின் மதத்தைச் சேர்ந்தவர் குண்டு வைத்தால், அவர் குன்வர் விஜய்ஷாவின் ‘சகோதரர்’ ஆகிவிடுவாரா? என்ன குரூரம் இது? என்ன மாதிரியான விஷ விதைகளைத் தூவுகிறார்கள்?**

**இந்த நாட்டில் பயங்கரவாதம் என்பது குண்டு வைப்பதால் மட்டும் வளர்வது இல்லை, இது போன்ற பேச்சுகளால்தான் அதிகம் வளர்கிறது.**

பகல்காம் தாக்குதலை முன்வைத்து ஒரு வார காலத்தில் 184 வெறுப்புக் குற்றங்கள் நடந்திருப்பதாக சிவில் உரிமை பாதுகாப்புச் சங்கம் (APCR) தகவல் தந்துள்ளது. இசுலாமியர்களையும், காஷ்மீர் மாநிலத்தில் வாழ்பவர்களையும் குறி வைத்து நடத்தப்பட்டுள்ளது இந்த வன்மத் தாக்குதல். 84 வெறுப்புப் பேச்சுகள், 39 தாக்குதல்கள், 19 சூறையாடல்கள், 3 கொலைகள் நடந்துள்ளன என்றும் சிவில் உரிமை பாதுகாப்புச் சங்கம் சொல்லி இருக்கிறது.

மத்தியப் பிரதேச அமைச்சர் குன்வர் விஜய்ஷா மீது, மத்தியப் பிரதேச மாநில உயர்நீதிமன்றமே தானாக முன் வந்து விசாரணை நடத்தியது. உடனே உச்சநீதிமன்றம் போனார் அமைச்சர். உச்சநீதிமன்றத்தாலும் உச்சந்தலையில் அவர் கொட்டு வாங்கினார். இது தனிப்பட்ட விஜய்ஷாவின் கருத்து மட்டுமல்ல. பா.ஜ.க. உருவாக்க நினைக்கும் விஷமே இதுதான். கர்னல் சோபியா குரேஷியை, பத்திரிக்கையாளர்கள் முன் நிறுத்தியதே இதற்காகத்தான்.

இந்திய ராணுவத்தின் தகவல் தொடர்பு (சிக்னல்ஸ்) படைப்பிரிவின் அதிகாரிதான் கர்னல் சோபியா குரேஷி. இவர் குஜராத்தைச் சேர்ந்தவர். உயிர் வேதியியலில் முதுகலைப் பட்டம் பெற்றவர். இவரது குடும்பமே இராணுவத்தில் பணியாற்றியது. இவரது தாத்தா, இந்திய ராணுவத்தில் பணியாற்றினார். இவரது கணவர் காலாட்படை அதிகாரி. 2016 ஆம் ஆண்டு சர்வதேச ராணுவப் பயிற்சியில் மொத்தம் 18 படைப்பிரிவுகள் பங்கேற்றன. அதில் ஒரு படைப்பிரிவை வழிநடத்திய ஒரே பெண் அதிகாரி லெப்டினன்ட் கர்னல் குரேஷி ஆவார். அவரைக் கொச்சைப்படுத்துவது என்ன வகை குரூரம்?

சோபியா, இந்தியாவுக்கு ஆதரவாகத்தான் போரிட்டாரே தவிர, அவரது மதத்துக்கு எதிராக அல்ல. பயங்கரவாதிகளுக்கு துணைபோகும் பாகிஸ்தானுக்கு எதிரான யுத்தமே தவிர, இது மாற்று மதத்துக்கு எதிரான யுத்தம் அல்ல. இதனை உணர வேண்டும்.

எல்லாவற்றையும் தங்களது மதவாத நோக்கங்களுக்காக மடைமாற்றத் துடிக்கும் பா.ஜ.க., அந்த நெருக்கடிக்குள் அதுவே சிக்கும். போரை நிறுத்திய பிரதமர் மோடிக்கு எதிராகவும் சங்கிகள் தங்கள் வாட்ஸ் அப் குழுக்களில் பதிவு போட்டுக் கொள்கிறார்கள். பா.ஜ.க. விதைத்த விதைக்குள் அதுவே வீழவும் தொடங்கி இருக்கிறது.

●●




சென்னை வண்டலூர் அருகில் உள்ள ஊனமாஞ்சேரி தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் நேற்று முன்தினம் (15.5.2025) நடைபெற்ற “காவல்துறையில் பெண்கள்” 11 வது தேசிய மாநாட்டில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுடன் மாநாட்டில் கலந்து கொண்ட பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த காவல்துறை பெண் அலுவலர்கள் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். இந்நிகழ்வில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை தலைமை இயக்குநர் மற்றும் படைத்தலைவர் சங்கர்ஜிவால், தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியக காவல்துறை தலைமை இயக்குநர் சந்தீப் ராய் ரத்தோர், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் காவல்துறை தலைமை இயக்குநர் சீமா அவர்வால், காவல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பணியக கூடுதல் காவல்துறை தலைமை இயக்குநர் ரவி ஜோசப் லோகு, உயர் காவல் அலுவலர்கள் மற்றும் ஓய்வு பெற்ற பெண் காவல் அலுவலர்கள் உடனிருந்தனர்.



சென்னை, நுங்கம்பாக்கம், பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம், அரசுத் தேர்வுகள் இயக்கக கூட்டரங்கில் நேற்று (16.05.2025) பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அரசுத் தேர்வுகள் இயக்ககம் சார்பில் மார்ச் / ஏப்ரல் 2025 நடைபெற்ற பத்தாம் வகுப்பு (SSLC) மற்றும் மேல்நிலை முதலாமாண்டு (+1) பொதுத் தேர்வு முடிவுகளை வெளியிட்டார். இந்நிகழ்வில் பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் பூ.ஆ.நரேஷ், தனியார் பள்ளிகள் இயக்குநர் முனைவர் மு.பழனிச்சாமி, பள்ளிக் கல்வித் துறை தேர்வுகள் இயக்கக இயக்குநர் திருமதி ந.லதா மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி எழுதிய

# ‘தேசிய கல்விக் கொள்கை - 2020 எனும் மத யானை’ நூல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று வெளியிடுகிறார்!

**சென்னை, மே 17 -**

**அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி எழுதிய “தேசிய கல்விக் கொள்கை 2020 எனும் மத யானை” நூலை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டு உரையாற்றுகிறார்.**

இந்நூல் வெளியீட்டு விழா இன்று (17.5.2025) மாலை 4 மணி அளவில் சென்னை அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்தில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரவேற்புரையாற்றுகிறார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நூலினை வெளியிட்டு உரையாற்றுகிறார்.

சிறப்பு விருந்தினர்களாக மத்திய பிரதேச முன்னாள் முதல்வர் திக்விஜய் சிங் எம்.பி., உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி வி.கோபாலகவுடா, ‘இஸ்ரோ’ முன்னாள் இயக்குநர் பத்மஸ்ரீ மயில்சாமி அண்ணாதுரை ஆகியோர் பங்கேற்கின்றனர்.

நிறைவாக, அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஏற்புரையாற்றுகிறார்.

அன்பில் பதிப்பகம் நன்றியுரையாற்றுகிறது.

## பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் 98.31 சதவிகிதம் தேர்ச்சி!

# மாநில அளவில் முதலிடத்தைப் பெற்ற சிவகங்கை மாவட்ட மாணவச் செல்வங்களுக்கு வாழ்த்து!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிக்கை!

சிவகங்கை, மே.17-

சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் 98.31 சதவீதம் தேர்ச்சி பெற்று மாநில அளவில் முதலிடத்தைப் பெற்று சிவகங்கை மாவட்ட மாணவச் செல்வங்கள் சாதித்திருக்கிறார்கள்.

அத்தகைய சாதனையை புரிந்து, தமிழ்நாட்டு அளவில் முதன்மையான மாவட்டமாக கல்வி வளர்ச்சியில் நம்முடைய மாவட்டத்திற்கு பெருமை சேர்த்த மாணவச் செல்வங்கள், அதற்கு பாடுபட்ட தலைமை ஆசிரியர்கள் உள்ளிட்ட ஆசிரியர் பெருமக்கள், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் உள்ளிட்ட கல்வித்துறை அலுவலர்கள் மற்றும் பெற்றோர்கள், எல்லாவற்றிற்கும் மேலான மாவட்ட ஆட்சியர் ஆகிய அனைவரையும் மனதார வெகுவாக பாராட்டுகிறேன்.



சென்ற ஆண்டு (2024) பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் சிவகங்கை மாவட்டம் இரண்டிலும் இரண்டாம் இடம் பெற்றிருந்தது. இந்த ஆண்டு பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் ஆறாமிடத்தை பெற்று மனச்சோர்வு தந்திருந்த நிலையில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகளில் மாநில அளவில் சிவகங்கை மாவட்டம் முதலிடத்தை பெற்று மனச்சோர்வு அனைத்தையும் போக்கி மட்டற்ற மகிழ்ச்சியை அனைவருக்கும் அளித்துள்ளது என்பதை பெரும் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் அரசு பள்ளிகள் அளவிலான தேர்ச்சி விகிதத்தில் 97.49 சதவீதம் தேர்ச்சி பெற்று மாநில அளவில் சிவகங்கை மாவட்டம் முதலிடம் பெற்றுள்ளது என்பதையும் பெரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் சாதனை புரிந்த மாணவச் செல்வங்கள் உள்ளிட்ட அனைத்து ஆசிரியர்கள், கல்வித்துறை அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் அனைவரையும் பாராட்டுகிறேன். இம்மகிழ்ச்சி தொடர்ந்து நீடித்திட வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# 11 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் 92.09 சதவிகித மாணவ, மாணவர்கள் தேர்ச்சி!

சென்னை, மே 17-

தமிழ்நாட்டில் கடந்த மார்ச் 5 ஆம் தேதியிலிருந்து 27 ஆம் தேதி வரை நடைபெற்ற,11 ஆம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. அதில், 92.09 சதவீத மாணவ, மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர். அதன்படி, தேர்வு எழுதிய மாணவ, மாணவிகளில் 7,43,232 பேர் தேர்ச்சி அடைந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. 11 ஆம் வகுப்பு தேர்வுகளில் 4,03,949 மாணவியர்களும், 3,39,283 மாணவர்களும் தேர்ச்சி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மாணவர்களை விட 6.43% மாணவியர் அதிகம் தேர்ச்சி பெற்றுள்ளனர். அறிவியல் பாடத்தில் 95.08 சதவீதமும், வணிகவியலில் 87.33 சதவீதமும் தேர்ச்சி பெற்றுள்ளனர். கலைப் பிரிவில் 77.94 சதவீதமும், தொழிற்பாடப் பிரிவில் 78.31 சதவீத மாணவ, மாணவிகளும் தேர்ச்சி அடைந்துள்ளனர். 11 ஆம் வகுப்பு தேர்வில் அதிக தேர்ச்சி சதவீதம் பெற்ற மாவட்டங்களில் அரியலூர் மாவட்டம் முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளது. அரியலூர் மாவட்டத்தில் 97.76 சதவீதமும், ஈரோடு மாவட்டத்தில் 96.97 சதவீதமும், விருதுநகர் 96.23 சதவீதமும் பெற்றுள்ளது. இதே போன்று, கோவை மாவட்டம் 95.77 சதவீதமும் தூத்துக்குடி மாவட்டம் 95.07 சதவீதம் பெற்று ஐந்தாவது இடத்தில் உள்ளது. அரசுப் பள்ளி மாணாக்கர்களில், அதிக தேர்ச்சி சதவிகிதம் பெற்ற முதல் 5 மாவட்டங்களிலும் அரியலூர் மாவட்டம் முதலிடம் பிடித்து மாணவ, மாணவிகள் சாதனை படைத்துள்ளனர். அதன்படி, அரியலூர் மாவட்டம் 96.94 சதவீதமும், ஈரோடு மாவட்டம் 95.37 சதவீதமும், நாகை 93.07 சதவீதமும், விருதுநகர் மாவட்டம் 92.07 சதவீதமும், சிவகங்கை மாவட்டம் 91.97 சதவீதமும் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# நீட் தேர்வு முடிவுகளை வெளியிட தடை!

## மத்தியப்பிரதேச உயர்நீதிமன்றம் உத்தரவு!

இந்தூரம், மே 17-

மத்தியப் பிரதேசம் மாநிலம் இந்தூரில் நீட் தேர்வு நடந்து கொண்டிருந்த போது பல மையங்களில் மின்தடை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக தேர்வு எழுதிய மாணவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தூரில் அரசு பள்ளி ஒன்றில் தேர்வு நடந்து கொண்டிருந்த போது மூன்று, நான்கு முறை மின்தடை ஏற்பட்டுள்ளது.

தேர்வு முடிவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்னர் தான், மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதனால் 20க்கும் மேற்பட்ட கேள்விகளுக்கு பதில் எழுதுவதில் சிரமம் ஏற்பட்டதாக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

மற்றொரு தேர்வு மையமான பி.எம்.ஸ்ரீ கேந்திரிய வித்யாலயா பள்ளியில் தேர்வு எழுதிய மாணவர்கள் தற்போது உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து உள்ளனர். தேர்வு நடந்து கொண்டிருந்த போது 3.30 மணிக்கு மின்தடை ஏற்பட்டது. 4.30 மணி வரை மாற்று ஏற்பாடுகள் எதுவும் செய்யவில்லை. அதன் பின்பு மெழுகுவர்த்தி ஏற்பாடு செய்யப்பட்டு மாணவர்கள் தேர்வு எழுதினர். அடுத்த 30 நிமிடங்க ளில் தேர்வு முடிந்து விட்டதால், கூடுதல் நேர அவகாசம் வழங்கப்படவில்லை. இதனால் பல கேள்விகளுக்கு விடை அளிக்க முடியாததால், 600 மாணவர்கள் தேர்வு எழுதியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்க வேண்டும் அதுவரை தேர்வு முடிவுகளை வெளியிட தடை விதிக்க வேண்டும் என்று மாணவர்கள் தரப்பில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை கடந்த 13ம் தேதி விசாரித்த உயர்நீதிமன்றம் தேசிய தேர்வு முகமை அதிகாரிகளை ஆஜராக உத்தரவிட்டிருந்தனர். இந்நிலையில், இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்த போது தேசிய தேர்வு முகமை சார்பில் யாரும் ஆஜராகவில்லை. இதற்கு கண்டனம் தெரிவித்த உயர்நீதிமன்றம் வழக்கை 4 வாரங்களுக்கு ஒத்தி வைத்தது. மேலும், நீட் தேர்வு முடிவுகளை வெளியிடுவதற்கு தடையும் விதித்தது. இந்த உத்தரவால் நாடு முழுவதும் நீட் தேர்வு முடிவுகளை வெளியிடுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.